வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 128/2019

வழக்கு சாட்சி LW7 /PW2

| பெயர் | ஆனந்தன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | லாசர் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 39 |

தேதி 12.03.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். தற்போது என்னடம் ஒப்புதல் வாக்குமூலம் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னடம் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு குறித்து தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரிகளை இதற்கு முன் பார்த்ததில்லை. போலீசார் என்னிடம் எதற்கு கையொப்பம் வாங்கினார்கள் என்று சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 30.07.2011 ம் காலை 8 மணிக்கு மாதவரம் அரசு பள்ளி அருகே ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக போலீசார் ஒரு நபரை கைது செய்தார்கள் என்றும் அவர் தன்னிச்சையாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய என்னை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்கள் என்றும், அதன் பேரில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், பின்பு அந்த நபர் அவரின் வீட்டின் அருகே வழக்கு சொத்தான கத்தியை மறைத்து வைத்திருந்ததை போலீசாரிடம் ஆஜர் படுத்தும்போது கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம்

செய்தேன் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.